நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிகள்

**மாமரத்தை தாக்கும் பூச்சிகளும் கட்டுப்படுத்தும் வழிகளும்...**

First Published : 23 Feb 2012 01:14:34 AM IST



புதுச்சேரி: தற்போதைய காலகட்டத்தில் மாமரத்தில் பூ எடுப்பது குறைந்துள்ள நிலையில், இருக்கும் பூக்களும் மூன்று விதமான பூச்சி தாக்குதலுக்கு உள்ளாகின்றன. முறையான பராமரிப்பின் மூலம் இதனைக் கடுப்படுத்தலாம்.

**மாம்பழ ரகங்கள்:** மாவில் நீலம், பெங்களூரா (தோத்தாப்புரி), அல்போன்சா, ரொமானி, பங்கனப்பள்ளி, பத்தர், செந்தூரா, மல்கோவா, மல்லிகா, சிந்து, ரத்னா உள்ளிட்ட பல்வேறு ரகங்கள் உள்ளன.

மல்லிகா, சிந்து போன்ற ரகங்கள் விதையில்லாத ரகங்கள். அல்போன்ஸா, பங்கனப்பள்ளி, தோத்தாப்பூரி ஆகிய பழங்கள் புதுச்சேரி மற்றும் விழுப்புரம், கடலூர், காஞ்சிபுரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் அதிகம் விளைவிக்கப்படுகின்றன. தானே புயல் காரணமாகவும், தட்டவெட்ப சூழ்நிலை மாற்றத்தாலும் மாமரத்தில் தற்போது இயல்பாகவே பூக்கள் குறைவாக உள்ளன.

**பூக்கள் வருவதற்கு..:** மாமரங்களில் பூக்கள் நன்றாக வருவதற்கு ஒரு லிட்டர் தண்ணீரில் 5 கிராம் யூரியாவை கலந்து தேவையான அளவுக்கு தண்ணீர் விட வேண்டும். அப்போது பூக்கள் நன்றாக வரும். பிப்ரவரி 29-ம் தேதிக்கு மேல் தட்வெட்ப நிலை மாறும் சூழல் இருப்பதால் அத் தேதிக்கு பிறகு இதுபோல் யூரியா கலந்த தண்ணீரை விடக் கூடாது.

இவ்வாறு பூக்கள் வரும்போது அதனை சில பூச்சிகள் தாக்குகின்றன. இந்த பூச்சி தாக்குதல் குறித்தும், இந்த தாக்குதலில் இருந்து பூச்சிகளை கட்டுப்படுத்துதல் குறித்தும் பெருந்தலைவர்

காமராஜர் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் பூச்சியியல் வல்லுநர் என்.விஜயகுமார் கூறியது:

தற்போது மா மரங்களை தத்துப்பூச்சி, சூட்டிமோல்ட், ஆந்த்ராக்னோஸ் ஆகிய பூச்சிகள் தாக்குகின்றன. புதுச்சேரி, கடலூர், விழுப்புரம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மா மரங்களில் இதுபோன்ற பூச்சி வகைகள் அதிகம் காணப்படுகின்றன. முறையான மருந்துகள் தெளிப்பதன் மூலம் இதனைக் கட்டுப்படுத்த முடியும்.

**தத்துப்பூச்சி:** இவ்வகை பூச்சிகள் ஒரு உமிழ்நீரை பூவில் சுரக்கும். இதன் காரணமாக பூ பழுப்பு நிறமாக மாறிவிடும். இதனால் பூவில் மகரந்த சேர்க்கை நடைபெறாமல் மகசூல் பாதிக்கும். புவியில் அதிக வெப்பம், காற்றில் அதிக ஈரப்பதம் ஆகிய காரணங்களால் இவ்வகை பூச்சிகள் உருவாகின்றன.

இவ் வகை பூச்சிகளைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டருக்கு 5 மி.லி வேப்ப எண்ணெய் கலந்து, இவற்றுடன் அசிட்டேட் 75 எஸ்பி ஒரு கிராம் சேர்த்து, பூவின் மேல் அடிக்க வேண்டும். அவ்வாறு அடிக்கும்போது வேகமாக அடிக்கக் கூடாது. வேகமாக அடித்தால் பூக்கள் கொட்டிவிடும். அதேபோல் ஒரு லிட்டர் தண்ணீருடன் 5 மி.லி வேப்ப எண்ணெய் கலந்து கார்பைல்-50 டபிள்யு பி என்ற மருந்தை 2 கிராம் சேர்த்தும் தெளிக்கலாம்.

பெவேரியா பேஸியான என்ற உயிர்ரக பூஞ்சான் மருந்தை ஒரு ஏக்கருக்கு 4 கிலோ என்ற விகித்தில் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். இது புதுச்சேரி காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தில் கிலோ ரூ.120-க்கு கிடைக்கிறது.

**சூட்டி மோல்ட்:** மாவுப் பூச்சி எனப்படும் பூச்சிகள் மாமர இலைகளைத் தின்று பின்னர் தேன் போன்ற திரவத்தை இலை மற்றும் பூக்கள் மீது பரவவிடுகின்றன. இதனால் பூக்கள் பாதிக்கும். இதனை கட்டுப்படுத்த ஒரு கிலோ மைதா அல்லது ஸ்டார்ச்சை ஒரு லிட்டர் தண்ணீர் கலந்து கொதிக்க வைக்க வேண்டும். லேசாக ஆறிய பின் இதனை 20 லிட்டர் தண்ணீரில் கலந்து கொள்ள வேண்டும். அதனுடன் பாஸ்கோ மிடான் 40 எஸ்.என். என்ற மருந்தையும் கலந்து தெளிக்க வேண்டும்.

ஆந்த்ராக்னோஸ்: இந்த பூச்சி தக்குதலால் மா-வின் காம்பு, இலை ஆகியவற்றில் நுணி கருகும். இவற்றை தடுக்க ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு கிராம் கார்பன்டாஸிம் மற்றும் மேன்கோ செப் கலந்து தெளிக்க இவ்வகை பூச்சி தாக்குதலை தடுக்கலாம் என்றார்.

1. மாமர இலை மற்றும் தண்டை தாக்கும் ஆந்த்ராக்னோஸ். 2. பூக்களை தாக்கும் ஆந்த்ராக்னோஸ்.

3. பூக்களை தாக்கும் தத்துப்பூச்சு.

## 3 மாதத்தில் ரூ.75 ஆயிரம் வருமானம்: சாமந்தி பூ விவசாயி பேட்டி

First Published : 23 Feb 2012 01:16:55 AM IST



குழித்தட்டு முறையில் உற்பத்தி செய்யப்படும் சாமந்தி நாற்று. சொட்டு நீர்ப் பாசன முறையில் பயிரிடப்பட்டுள்ள சாமந்தி பூ மகசூல். (உள்படம்) சாதனை விவசாயி க

திருக்கோவிலூர்: கூடுதல் லாபம் பெற சாமந்தி பூவை பயிரிடலாம் என்று விவசாயி கங்காதரன் தனது அனுபவத்தை தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூரை அடுத்த கொடுக்கப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த கங்காதரன், கடந்த 3 ஆண்டுகளாக ஏரோடில் ரக சாமந்தி பூ (மேரி கோல்டு) பயிர் செய்து வருகிறார்.

இது குறித்து அவர் கூறியது: டிசம்பர், ஜனவரி மாதத்தில் குழித்தட்டு முறையில் நாற்றங்கால் அமைத்து, 15 முதல் 18 நாள்களில் சொட்டுநீர்ப் பாசனம் மூலம் 5 அடி இடைவெளியில் இரு வரிசைகளாக, இரண்டரை அடிக்கு 1 என்ற இடைவெளியில் 20 சென்ட் அளவுக்கு நடவுச் செய்துள்ளேன்.

ரசாயன உரம் அதிகம் சேர்க்காமல் தொழுஉரம் மற்றும் இயற்கை உரங்களைப் போட்டு நடவு செய்த 30 நாள்களில் பூக்கள் பூக்கத் தொடங்கும். பூக்கள் 2 நாள்களுக்கு ஒருமுறை சராசரியாக 20 கிலோ கிடைக்கிறது. 1 கிலோ பூவின் விலை ரூ.50-க்கு விற்பனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. 25 முறை பூப்பறிக்கப்படுகிறது. 3 முறை பூச்சி மருந்து தெளிக்கப்படுகிறது. 2 முறை களையெடுக்கப்படுகிறது.

தேவைக்கேற்ப சொட்டுநீர்ப் பாசனத் திட்டத்தின் கீழ் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. நீரின் மூலம் மேலுரம் இடப்படுகிறது.

100 நாள்களில் 20 சென்ட்டில் ரூ.25 ஆயிரம் கிடைக்கிறது. சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு பூக்களின் விலை அதிகமாக உள்ளதால் நிறைந்த வருமானத்தால் நாங்கள் குடும்பத்துடன் மகிழ்ச்சியோடு உள்ளோம். 20 சென்ட்டுக்கு உழவு மற்றும் தொழு உரத்துக்கு ரூ.1,600, விதைக்கு

ரூ.2,400, தென்னை நார்கழிவு மற்றும் குழித்தட்டுக்கு ரூ.200, நாற்று தயார் செய்வதற்கு ரூ.600, நடவுக்கு ரூ.300, நீர்ப் பாய்ச்ச ரூ.2,500, உரத்துக்கு ரூ.500, பூப்பறிக்க ரூ.1,000, மருந்து மற்றும் தெளிப்புக்கு ரூ.600, களையெடுக்க ரூ.300 என மொத்தம் ரூ.9,900 செலவு ஆகிறது.

எனவே மொத்த வருமானம் ரூ.25 ஆயிரத்தில் செலவுத்தொகை ரூ.9,900 போக, ரூ.15,100 லாபம் மட்டுமே கிடைக்கிறது.

இதன் மூலம் 3 மாதங்களில் ஏக்கருக்கு ரூ.75 ஆயிரம் வருமானம் கிடைக்க வாய்ப்புள்ளது.

சொட்டுநீர்ப் பாசன முறையில் 6 ஏக்கர் பரப்பளவில் கரும்பு பயிர் செய்துள்ளேன். செவந்தப்பட்டி கத்தரி 1.5 ஏக்கரிலும், சோனல் ரக வெண்டை 50 சென்ட் இடத்திலும், சுரக்காய், மிளகாய் மற்றும் கீரை வகைகள், காய்கறிகள் சொட்டு நீர்ப் பாசனத்தின் மூலம் சிறந்த முறையில் பயிர் செய்து வருகிறேன். இதனால் சுற்றுப்புற கிராம மக்களுக்கு சுவையான காய்கறிகள் கிடைக்க வழிவகை செய்கிறேன். இதைத்தவிர கடந்த 3 ஆண்டுகளாக குழித்தட்டு முறையில் தென்னை நார்க் கழிவை பயன்படுத்தி நாற்றுகள் தயாரித்து விவசாயிகளுக்கு நாற்று உற்பத்தி செய்து வழங்கி வருகிறேன் என்று அவர் தெரிவித்தார்.

பி.கங்காதரனின்

தொடர்பு எண்: 98652 76372

படங்கள்: கே.சத்தியமூர்த்தி

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**உணவு பதப்படுத்துதல் குறித்து ஃபிப்., 27ல் பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 23,2012,01:50 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு: மத்திய அரசின் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அமைச்சகத்தின் கீழ் இயங்கி வரும் எம்.எஸ்.எம்.இ., மேம்பாட்டு நிலையம் சார்பில், கோவை மற்றும் ஈரோடு மாவட்ட சிறு தொழில்கள் சங்கம் மூலம், உணவு பதப்படுத்துதல் மற்றும் தொழில் முனைவோர் ஊக்குவிப்பு முகாம், ஃபிப்., 27 மாலை 3 மணிக்கு, ஈரோடு மாவட்ட சிறு தொழில்கள் சங்க கூட்டமைப்பு

கூட்ட அரங்கில் (சிட்கோ தொழிற்பேட்டை - சென்னிமலை ரோடு) நடக்கிறது.
மத்திய, மாநில அரசுகளின் திட்டங்கள், தொழிலை மேம்படுத்தும் வழிமுறைகள், தரக்கட்டுப்பாட்டு முறை, தரமான பொருள் உற்பத்திக்கான வழிமுறைகள் போன்றவை விளக்கப்படும்.
ஈரோடு மாவட்டத்தில் பால் பதனிடும் தொழில்கள், பேக்கரி தொழிலில் உள்ளவர்கள், மசாலா உற்பத்தி, காய்கறி, பழங்கள் பதனிடும் நிறுவனங்கள் மற்றும் இதர உணவு நிறுவனங்கள் பங்கேற்கலாம். அவர்கள் சார்ந்த தொழிலில் உணவை பதப்படுத்தும் முறை குறித்தும் விளக்கப்படும். முகாமில் பங்கேற்க எவ்வித கட்டணமும் இல்லை.
முகாமில் பங்கேற்க விரும்புவோர், "உதவி இயக்குனர், எம்.எஸ்.எம்.இ., 386-பட்டேல் சாலை, ராம்நகர், கோவை - 641 009' என்ற முகவரி அல்லது ஃபோன் 0422 223 3956, 223 0426, 94434 70062 அல்லது ஈரோடு மாவட்ட சிறு தொழில் சங்கம், சிட்கோ தொழிற்பேட்டை, சென்னிமலை ரோடு, ஈரோடு - 1, என்ற முகவரி, அல்லது ஃபோன் 0424 227 4307ல் 25ம் தேதிக்கு முன் பதிவு செய்ய வேண்டும். இத்தகவலை உதவி இயக்குனர் சிவசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

**தர்ப்பூசணியில் நோய் தாக்கத்தால் உற்பத்தி குறைவு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 23,2012,01:46 IST

கருத்தை பதிவு செய்ய

கோபிசெட்டிபாளையம்: கோபி பகுதியில் தர்ப்பூசணி செடியில் நோய் தாக்கத்தால் உற்பத்தி குறைந்துள்ள நிலையில், விலை சரிவால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.
கோபி, பங்களாபுதூர், மாக்கினாங்கோம்பை, கொளப்பலூர், வாணிப்புத்தூர், டி.என்.பாளையம், அத்தாணி, கள்ளிப்பட்டி, துறையம்பாளையம், சிறுவலூர், குருமந்தூர், பதிபாளையம், கவுந்தபாடி, எல்லீஸ்பேட்டை உள்ளிட்ட இடங்களில் தர்ப்பூசணி பயிரிடப்பட்டுள்ளது. ஏப்ரல், மே மாதத்தில் தர்பூசணி விற்பனைக்கு வரும்.
நடப்பாண்டு ஜனவரி இறுதியில் தர்ப்பூசணி அறுவடை துவங்கியது. நோய் தாக்கம் காரணமாக உற்பத்தி கணிசமாக குறைந்து விட்டது. சென்றாண்டை விட விலை சரிவடைந்துள்ளதால் விவசாயிகள் கலவையடைந்துள்ளனர்.

விவசாயிகள் கூறியதாவது: தர்ப்பூசணி, 90 நாட்கள் பயிராகும். ஹைதராபாத், பெங்களூரு ஆகிய இடங்களில் இருந்து தர்ப்பூசணி விதை வாங்கி வந்து பயிரிடுகிறோம். தர்ப்பூசணியில் நாமோதரி, ரியா, மும்தாஜ், பக்கிஜா, மைக்ரோ உள்பட 10 வகையான ரகங்கள் உள்ளன. சென்றாண்டில் ஒரு டன், 8,200 ரூபாய்க்கு விலை போனது. நடப்பாண்டு கோடை வெயிலுக்கு முன் விளைச்சலாகி

விட்டதால், ஒரு டன் 4,500 ரூபாய் வரை மொத்த விலைக்கு விற்கப்படுகிறது. வெளி மார்க்கெட்டில் ஒரு துண்டு, ஐந்து முதல் 10 ரூபாய் வரை விற்பனை செய்கின்றனர். நடப்பாண்டு நோய் தாக்குதல் ஏற்பட்டதால் விளைச்சல் குறைந்து விட்டது. சென்ற ஆண்டில் ஒரு ஏக்கரில், 15 டன் வரை தர்பூசணி அறுவடை செய்யப்பட்டது; தற்போது, 10 டன் வரை விளைச்சலாகி உள்ளது. கோடை காலம் இன்னும் இரண்டு மாதங்கள் நீடிக்கும் நிலையில், கோபி சுற்று வட்டாரத்தில் தர்ப்பூசணி அறுவடை நிறைவடையும் நிலையில் உள்ளது. அக்னி வெயில் காலத்தில் பெங்களூரு, மைசூரு ஆகிய இடங்களில் இருந்து தர்பூசணி வரத்தாகும் சூழ்நிலை உள்ளது. அப்போது விலை அதிகரித்தாலும், எங்களுக்கு பயனில்லை. இவ்வாறு அவர்கள் கூறினர்.

**விவசாயிகளின் நெல் கொள்முதல்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 23,2012,02:19 IST

கருத்தை பதிவு செய்ய

மேலூர் :மேலூர் அருகே வெள்ளலூரில் பல நாட்களாக காத்திருந்த விவசாயிகளின் நெல் கொள்முதல் செய்யும் பணி தினமலர் இதழ் செய்தி எதிரொலியாக நேற்று துவங்கியது.

நெல் கொள்முதல் மையங்களில் வியாபாரிகளின் தலையீடு காரணமாக விவசாயிகளின் நெல் கொள்முதல் செய்யப்படவில்லை. வெள்ளலூரை சுற்றிய பகுதிகளை சேர்ந்த விவசாயிகளின் நெல் கொள்முதல் செய்யப்படாமல், அவர்கள் பல நாட்களாக காத்திருந்தனர். இதுகுறித்து தினமலர் இதழில் செய்தி வெளியானது.

இதுகுறித்து நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் உத்தரவிட்டனர். நேற்று விவசாயிகளின் நெல் கொள்முதல் செய்யும் பணி துவங்கியது. விவசாயிகளின் சாக்குகளிலேயே கொள்முதல் செய்யப்பட்டன.

**வெண்டைக்காய் விளைச்சல் ஜோர் : ஈரோடு விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 23,2012,01:45 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு:உபரி வருமானத்துக்காக பயிரிடப்பட்ட வெண்டைக்காய் விளைச்சல் ஜோராக இருப்பதால், ஈரோடு விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

ஈரோடு மாவட்டத்தில் கரும்பு, வாழை, மஞ்சள், நெல் ஆகியவை அதிகளவில்

பயிரிடப்படுகின்றன. இதுதவிர, கைச்செலவுக்காக காய்கறி செடிகளை விவசாயிகள் பயிரிடுவது வழக்கம். பனிக்காலத்தால், காய்கறி விற்பனை நிலையங்களில் அதன் விலை கட்டுக்கடங்காமல் உயர்ந்தது. எனவே, ஈரோடு மாவட்ட விவசாயிகள் தங்கள் நிலத்தில் தக்காளி, கீரை, சிறிய வெங்காயம், சேனைக் கிழங்கு, கத்தரிக்காய், வெண்டைக்காய் ஆகிய காய்கறிகளை அதிகளவில் பயிரிட்டுள்ளனர். பவானி ரோடு, கோணவாய்க்கால் பகுதியில் அதிகளவில் விவசாயிகள், வெண்டைக்காய், கத்திரிக்காய் பயிரிட்டுள்ளனர். இவற்றின் விளைச்சல் ஜோராக இருப்பதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

விவசாயி கோபாலகிருஷ்ணன் கூறுகையில், ""என்னுடைய இரண்டு ஏக்கர் நிலத்தில், ஒன்றரை ஏக்கருக்கு நெல்லும், மீதமுள்ள நிலத்தில் வெண்டைக்காயும் சாகுபடி செய்துள்ளேன். ஏக்கருக்கு ஒரு கிலோ விதை விதைத்தால், 400 கிலோ வெண்டைக்காய் கிடைக்கும். இலைக்கு ஒரு காய் வீதம், செடிக்கு 32 காய் காய்க்கும்.
வீட்டுக்கு தேவையான காய்கறிகள் போக மீதமுள்ள காய்கறியை மார்க்கெட்டுக்கு விற்பனைக்காக கொடுத்து விடுவோம். கடந்த முறை கிலோ 23 ரூபாய் வரை வியாபாரிகள் வாங்கிச் சென்றனர். கடந்த சிலமாதமாக வெண்டைக்காய் சாகுபடி விவசாயிகளுக்கு பெருத்த ஏமாற்றத்தை தந்து வருகிறது. தற்போது கிலோ வெறும் பத்து ரூபாய்க்கு மட்டும் வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர். ஆனால், மார்க்கெட்டில் இதே வெண்டைக்காயை வியாபாரிகள், 32 ரூபாய் வரை விற்பனை செய்கின்றனர்.

**கொப்பரை விலை கிலோ ரூ.3 உயர்வு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 23,2012,01:51 IST

கருத்தை பதிவு செய்ய
கோபிசெட்டிபாளையம்: கொப்பரை விலை மீண்டும் சூடுபிடிப்பதால் கொப்பரை உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். நேற்றைய மார்க்கெட்டில் கொப்பரை கிலோவுக்கு மூன்று ரூபாய் அதிகரித்தது.
கோபி சுற்று வட்டாரத்தில், 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் உள்ளன. தேங்காய் அறுவடை செய்து, கொப்பரையாக மாற்றப்படுகிறது. கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மற்றும் தனியார் கூடங்களில், விவசாயிகள் கொப்பரை விற்பனை செய்கின்றனர். தேங்காய் எண்ணெய் விலை தொடர்ந்து வீழ்ச்சியடைந்ததால், 50 ரூபாய்க்கு விற்கப்பட்ட கொப்பரை விலை தொடர்ந்து வீழ்ச்சியடைந்தது. கிலோ 39.75 ரூபாய் முதல் 36.13 ரூபாய்க்கு விற்கப்பட்டது. கொப்பரை விலை வீழ்ச்சியால் கொப்பரை உற்பத்தியாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

தேங்காய் எண்ணெய் மார்க்கெட் மீண்டும் சூடுபிடிக்க துவங்கி உள்ளதால், கொப்பரை விலை மீண்டும் உயரத் துவங்கியுள்ளது. நேற்றைய நிலவரப்படி கிலோ, 41.19 ரூபாய் முதல் 42.69 ரூபாய்க்கு விற்கப்பட்டது. சென்ற வாரத்தை காட்டிலும் நேற்றைய மார்க்கெட்டில் கிலோவுக்கு மூன்று ரூபாய் உயர்ந்திருந்தது.

## 26ல் "வாழைப்பழ உணவுத் திருவிழா'

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 22,2012,22:29 IST

கருத்தை பதிவு செய்ய

கோவை : ஏ.ஜே.கே., கலை அறிவியல் கல்லூரியின், "கேட்டரிங் மற்றும் ஹோட்டல் மேனேஜ்மெண்ட்' துறை சார்பில், வாழைப்பழ உணவுத் திருவிழா கோவையில் வரும் 26ம் தேதி நடக்கிறது.

கல்லூரிச் செயலாளர் அஜித்குமார் லால்மோகன், நிருபர்களிடம் கூறியதாவது:

வாழைப்பழம், நெல், கோதுமை, சோளத்துக்கு அடுத்து, நான்காவது முக்கிய உணவாக, திகழ்கிறது. இதன் அறிவியல் பெயர் மூசா. இப்பழம் முதன் முதலில் இந்தியா, மலேசியா போன்ற நாடுகளில் மட்டுமே பயிரிடப்பட்டு வந்தது. இன்று, 153 நாடுகளில் பயிரிடப்படுகிறது. சர்வதேச அளவில் உற்பத்தியாகும், 3.2 கோடி டன் வாழைப்பழங்களில், 24 சதவீதம் இந்தியாவில், 128 லட்சம் எக்டர் நிலப்பரப்பில், பயிரிடப்படுகிறது.

தமிழகத்தை பொருத்தவரை, 20க்கும் மேற்பட்ட வகைகளில், வாழைப்பழங்கள் விளைவிக்கப் படுகின்றன. இதில், கன்னியாகுமரியில் மட்டுமே, அதிக வகையில் பயிராகின்றன.

வாழையில் பல்வேறு வகையான சத்துகள், மருத்துவ குணங்கள் அடங்கியுள்ளன. இவ்வரிய வகை உணவின் மகத்துவத்தை அறிந்து கொள்ளவும், பல்வகை வாழைகளின் சுவையை மக்கள் உண்டு மகிழவும், "வாழைப்பழ உணவுத் திருவிழா', வரும் 26ம் தேதி மாலை 5.30 முதல் இரவு 9.30 மணி வரை, அவினாசி ரோடு கொடிசியா அரங்கில் நடத்தப்படுகிறது.

இதில், உள்நாட்டில் விளையும் வாழைப்பழங்கள் தவிர, வெளிநாடுகளில் விளையும் வாழைப்பழ வகைகளும், இறக்குமதி செய்யப்பட்டு, அவற்றின் பூ, காய், பழம், தண்டு மூலமாக, 100க்கும் மேற்பட்ட வகைகளில், உணவுகள் தயாரிக்கப்படுகின்றன. குறிப்பாக, பழம்பொறி, வாழைப் பூ வடை, ஸ்டப்டு சில்லி பனானா, வாழைப்பழ பப்ஸ், கட்லெட், பீசா, பர்கர், ஸ்பிரிங் ரோல், சூப், ஸ்வீட் கார்ன் சூப், ரசம், சாலட், பிரியாணி, புலாவ், ப்ரைடு ரைஸ், தோசை, இட்லி, அடை, ஆப்பம், பணியாரம், மில்க் ஷேக், லெசி, ஐஸ்க்ரீம், கேக், கேரமல் கஸ்டர்டு, ப்ளூ பெர்ரி கேக், பாஸ்ட்ரி, அல்வா, பாயசம், கீர் உள்ளிட்ட வகைகளில் உணவுகள் தயாரிக்கப்பட்டு, பொதுமக்கள் சுவைக்க ஒவ்வொரு வகையும், ரூ.20க்கு விற்பனை செய்யப்படுகிறது.

கல்லூரியின் ஆடை வடிவமைப்புத் துறை மாணவ, மாணவியர் வாழை நாரில் தயாரித்த ஆடைகளின் அணிவகுப்பு மற்றும் மேஜிக் ÷ஷா, பாட்டு, நடனம், விளையாட்டுப் போட்டிகள் நடக்கின்றன.

பங்கேற்க நுழைவு கட்டணம் ரூ.20; நிகழ்ச்சியன்றே அரங்கின் நுழை வாயிலில் நுழைவு சீட்டை பெறலாம். அரிய வகை வாழைப்பழங்களை வாங்கி செல்ல விரும்புவோரும், இதில் கலந்து கொள்ளலாம்.இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

**வாழை இலை விலை "கிடுகிடு'**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 22,2012,22:54 IST

கருத்தை பதிவு செய்ய

பல்லடம் : திருமணம், புதுமனை புகுதல் போன்ற சுப நிகழ்ச்சிகள் காரணமாக, பல்லடம் பகுதியில் வாழை இலை விலை கட்டுக்கு ரூ.150 அதிகரித்தது.

பல்லடம் பகுதிக்கு சூலூர், சோமனூர், கள்ளிப்பாளையம், அய்யன்கோவில், நடுப்பாளையம், வேலம்பாளையம், தூத்துக்குடி ஆகிய பகுதிகளில் இருந்து வாழை இலைகள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. கடந்த கார்த்திகை, மார்கழி மாதங்கள் இறைவனுக்கு உகந்த மாதம் என்பதால், இம்மாதங்களில் திருமணம், புதுமனை புகுதல், காதுகுத்து போன்ற சுப நிகழ்ச்சிகள் நடத்துவதில்லை.

இதன் காரணமாக, கடந்த இரு மாதங்கள் வாழை இலையின் பயன்பாடு மிகவும் குறைவாக இருந்தது. 100 இலைகள் கொண்ட ஒரு கட்டு வாழை இலை ரூ.300 ஆகவும், ஒரு டிபன் இலை 1.25 ரூபாயாகவும், ஒரு சாப்பாட்டு இலை விலை இரண்டு ரூபாயாகவும் இருந்தன.

மாசி மாதம் பிறந்ததும் பல்லடம் பகுதியில் சுப நிகழ்ச்சிகள் களைகட்ட துவங்கியுள்ளன. இதன் காரணமாகவும், பனியில் வாழை விளைச்சல் குறைவு காரணமாகவும், தற்போது ஒரு கட்டு வாழை இலை விலை ரூ.450 ஆகவும், டிபன் இலை ரூ.1.50, சாப்பாட்டு இலை ரூ.இரண்டு ஆகவும் விலை உயர்ந்துள்ளன.

**விளைந்த வெங்காயத்திற்கு விலையில்லை கண்ணீர் : மின்தடையால் விவசாயிகள் வேதனை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 22,2012,22:47 IST

உடுமலை : உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் பயிரிடப்பட்ட சின்னவெங்காயத்திற்கு போதிய விலை கிடைக்கவில்லை; மின்தடையால் தற்போதைய சீசனில் பயிரிடப்பட்டுள்ள பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாமல் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.

உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் பி.ஏ.பி., மற்றும் கிணற்றுப்பாசனத்திற்கு ஆண்டு முழுவதும்

சின்னவெங்காயம் சராசரியாக இரண்டு ஆயிரம் ஏக்கர் வரை பயிரிடப்படுகிறது. வீரிய ரக விதைகள் பயன்படுத்தப்படுவதால் 70 நாட்களில் சின்னவெங்காயம் அறுவடைக்கு தயாராகிறது. கடந்த சீசனில் பயிரிடப்பட்ட சின்னவெங்காயம் அறுவடை பணிகள் தற்போது தீவிரமாக நடக்கின்றன. இந்நிலையில், பல்வேறு காரணங்களால் விலை வீழ்ச்சியடைந்து சராசரியாக கிலோ ஏழு ரூபாய் என்ற அளவில் கொள்முதல் செய்யப்படுவதால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.

கிலோவுக்கு 20 ரூபாய்க்கும் அதிகமாக விலை கிடைத்தால் மட்டுமே சாகுபடி செலவு கட்டுப்படியாகும் என தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை, மலேசியா உட்பட பல்வேறு நாடுகளுக்கு தமிழ்நாட்டிலிருந்து சின்னவெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. கடந்த சில மாதங்களாக ஏற்றுமதி வாய்ப்புகள் குறைந்துள்ளன. வரத்து அதிகரித்து ஏற்றுமதி இல்லாததால் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

ஏக்கருக்கு ஆறு முதல் எட்டு டன் வரை விளைச்சல் இருந்தாலும் ஏக்கருக்கு சாகுபடி செலவு 50 ஆயிரத்தை தொடுவதால் தற்போதைய விலை நிலவரம் விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாட்டில் சின்னவெங்காய சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தி அதிகரித்துள்ளதால் போதுமான ஏற்றுமதி வாய்ப்புகளை உருவாக்கி "நேபட்' நிறுவனம் மூலம் அரசே கொள்முதல் செய்ய வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

விலை வீழ்ச்சி காலங்களில் வீரிய ரக விதைகளை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் சின்னவெங்காயத்தை குறிப்பிட்ட நாட்களுக்கு மேல் இருப்பு வைக்க முடிவதில்லை. எனவே ஒவ்வொரு சீசனிலும் சின்னவெங்காய விவசாயிகள் பாதிப்பிற்குள்ளாகி வருகின்றனர்.

பல விவசாயிகள் சின்னவெங்காய சாகுபடியை கைவிட்டு மாற்றுப்பயிருக்கு மாறி வருகின்றனர்.

கருகும் பயிர்கள்: கடந்த சீசனில் சின்ன வெங்காயம் பயிரிட்ட விவசாயிகளுக்கு விலை கிடைக்காத நிலையில், தற்போதைய சீசனில் நடவு பணிகளை மேற்கொண்டவர்கள் பயிர்கள் கருகி வருவதால் கவலையடைந்துள்ளனர்.

உடுமலை பகுதியில், மும்முனை மின்சாரம் சீராக வழங்கப்பட்டு பல மாதங்களாகிறது. மின்தடையால் எப்போது மோட்டாரை இயக்குவது என தெரியாத நிலை உள்ளது. இதனால், குறித்த நேரத்திற்கு தண்ணீர் பாய்ச்ச முடியாமல் பயிர்கள் கருகி வருகின்றன. நடவு பணிகளை மேற்கொண்டு களை எடுத்தல், உரம் இடுதல் ஆகிய பணிகளை மேற்கொண்ட பின் தண்ணீர் பாய்ச்ச முடியாததால் தற்போது வரை செலவிட்டுள்ள 15 ஆயிரம் ரூபாய் கூட கிடைக்காத நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது. கோடை காலம் துவங்கியுள்ளதால், பயிர்கள் நோய்த்தாக்குதலுக்கு ஆளாகி விளைச்சலின் அளவை கேள்விக்குறியாக்கியுள்ளது.

இவ்வாறு, ஒவ்வொரு சீசனிலும் பல்வேறு பிரச்னைகளுக்கு ஆளாகி விவசாயிகள் கண்ணீர் விடுவதை தடுக்க தோட்டக்கலைத்துறை மூலம் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு வேளாண் பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 22,2012,22:17 IST

கருத்தை பதிவு செய்ய

கடலூர்:மாநில வேளாண்மை விற்பனை வாரியம் சார்பில் விவசாயிகளுக்கான பயிற்சி கடலூர் முதுநகர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நடந்தது.
மாவட்ட வேளாண் துணை இயக்குனர் (வேளாண் வணிகம்) தனவேல் தலைமை தாங்கினார்.
கடலூர் கோட்ட வேளாண்மை அலுவலர் சுரேஷ் வரவேற்றார்.
இப்பயிற்சியில் கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் கிறிஸ்டி நிர்மலா மேரி வேளாண் விளைபொருட்களுக்கான நெல், பயறு வகை, எண்ணெய் வித்து பயிர்களுக்கான அறுவடைக்குப் பின் செய்நேர்த்தி, தரம் பிரிப்பு தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கினார்.

பண்ருட்டி சந்தை பகுப்பாயினர் கார்த்திக், காய்கறி மற்றும் பழப்பயிர்களின் சந்தை அறிவுத்திறன், சந்தை தகவலால் விவசாயிகளுக்கு ஏற்படும் நன்மை குறித்தும், அங்ககச் சான்றளிப்புத் துறை ஆய்வாளர் சத்தியமூர்த்தி, இயற்கை வேளாண்மை உற்பத்தி செய்யப்படும் விளைபொருட்களுக்கான வணிகம் குறித்தும் விளக்கினர். இதில் 50 விவசாயிகள் பங்கேற்றனர்.
கடலூர் வட்டார உதவி வேளாண் அலுவலர் ஆரோக்கியதாஸ் நன்றி கூறினார்.

**விவசாயிகள் கடன் பெற அழைப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 22,2012,21:31 IST

கருத்தை பதிவு செய்ய

விருதுநகர் :விருதுநகர் மாவட்ட விவசாயிகள் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில், நுண்ணீர் பாசனக்கடன், மத்திய காலக்கடன்களுக்கு விண்ணப்பிக்கலாம்.
விருதுநகர் கலெக்டர் மு.பாலாஜி தெரிவித்திருப்பதாவது: மாவட்டத்தில் செயல்படும் 182 தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களில், நுண்ணீர் பாசனக்கடன், மத்திய காலக்கடன்கள் தேவைப்படும் விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்.
விவசாயிகள் கடன் விண்ணப்பம், போட்டோ, முகவரிக்கான சான்று விபரங்களுடன் பிப். 28 முதல் மார்ச் 1 ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம், கடன் விண்ணப்பங்கள் அனைத்து தொடக்க கூட்டுறவு கடன் சங்கங்களிலும் கிடைக்கும்.
விவசாய விளை பொருட்களை வைத்து கடன் பெற, விவசாயி ஒரு நபருக்கு அதிகபட்சம், ரூ. 3

லட்சம் வரை, அனைத்து விவசாய விளை பொருட்களுக்கும் சந்தை மதிப்பில் 70 சதவீதம் வரை கடன்கள் பெற்று கொள்ளலாம்.
தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில், விவசாயிகள் கடன் பெறுவது குறித்து சிறப்பு கூட்டம், பிப். 27 மாலை 3 மணிக்கு கலெக்டர் அலுவலக அரங்கில் நடக்கவுள்ளது.
விவசாயிகள் கலந்து கொள்ளலாம் என, தெரிவித்துள்ளார்.

**கொள்முதல் நெல்லுக்கு உடனடி பட்டுவாடா**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 22,2012,21:31 IST

கருத்தை பதிவு செய்ய
விருதுநகர் :""கொள்முதல் செய்த நெல்லுக்கு உடனடியாக பணப்பட்டுவாடா செய்ய வேண்டும்,"என,கலெக்டர் பாலாஜி கூறினார் .
வத்திராயிருப்பு கான்சாபுரம் நெல் கொள்முதல் மையங்கள், ஸ்ரீவில்லிபுத்தூர், வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் நேரில் ஆய்வு செய்த அவர் கூறியதாவது:
நுகர் பொருள் வாணிபக்கழகம் சார்பில் வத்திராயிருப்பு, கான்சாபுரம், காரியாபட்டி, நொச்சிகுளம், உலக்குடியிலும், கூட்டுறவுத்துறை சார்பில் ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் கூட்டுறவு விற்பனை சங்கங்கள், மம்சாபுரம், சாத்தூர், நாலூர், தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் நெல் கொள்முதல் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நரிக்குடி, வல்லம்பட்டி, நென்மேனி யில் நெல் கொள்முதல் மையங்கள் துவக்கப்படவுள்ளன. இந்த பயிர் பருவ ஆண்டில் அக். 2011 முதல் 2012 செப். வரை, 9 ஆயிரம் டன் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டது.

தற்போது 3 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.விவசாயிகளிடம் மட்டுமே நெல் கொள்முதல் செய்ய வேண்டும்.
இதை உறுதிப்படுத்துவதற்கு, விவசாயிகள் அடையாள அட்டை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.
அரசு அறிவித்துள்ள ஈரப்பதம் இருக்க, கருவிகள் மூலம் ஆய்வு செய்ய வேண்டும். பாரபட்சமின்றி வரிசைப்படி எடை போட வேண்டும். விவசாயிகளிடம் அரசு நிர்ணயித்துள்ள இறக்கு கூலி மட்டுமே பெற வேண்டும்.
கொள்முதல் செய்த நெல்லுக்கு உடனடியாக பணப்பட்டுவாடா செய்ய வேண்டும்,என்றார்.
நுகர் பொருள் வாணிபக்கழக மண்டல மேலாளர் பாலகிருஷ்ணன், கூட்டுறவு சங்க இணைப்பதிவாளர் சுப்பிரமணியன், வேளாண் இணை இயக்குனர் ஜெயபாண்டியன், நெல் தர ஆய்வாளர் சுந்தர்ராஜன் உட்பட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.